அரசுத்துறை மூலம் மருந்து மற்றும் மாத்திரைகள் தயாரிக்கும் செயற்குறிப்பு,

*வினா எண். 486—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத்துறை மூலம் நேரடியாக மருந்து மற்றும் மாத்திரைகள் தயாரிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே நேரடியாக மருந்து, மாத்திரைகள் தயாரிக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கனவே மருந்து தயாரிக்கக் கூடிய கம்பெனிகள் தங்கள் இஷ்டம் போல் விலைகளை ஏற்றியும், பல்வேறு மோசடிகளையும் செய்து வருவதால் அரசாங்கமே இதுபற்றி மீண்டும் பரிசிலனை செய்து அரசாங்கமே மருந்து தயாரிக்கும் தொழிலைத் தொடங்குவது பற்றிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இதுபற்றிய ப்ராஜெக்ட் ரிப்போர்ட்ஸ் தயார் செய்தோம். அந்த ரிப்போர்ட் அடிப்படையிலே இன்டியன் டிரக்ஸ் அண்டு பார் மசூட்டிகல்ஸ் லிமிடெட் என்ற ஒரு மத்திய அரசாங்கத்தின் சார்பாக நடக்கின்ற நிறுவனம்தான் மருந்துகளைத் தயாரித் துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் அண்மையிலே இங்கே வந்து கூட அதனை விஸ்தரிப்பதற்குரிய வாய்ப்புகளைத் தர வேண்டும் என்று சொன்னார்கள். தமிழ்நாடு தாதா ஃபார்ம சூட்டிக்கல்ஸ் நிறுவனம் என்பது தமிழக அரசும் சேர்ந்த ஒரு ஜாயின்ட் செக்டார் நிறுவனமாகும். அவர்களும் மருந் தினைத் தயாரித்துக்கொடுக்கிறார்கள். இதே இரண்டு நிறுவ னங்களும் தேவைப்படுகின்ற அளவுக்கு மருந்துகளைத் தயாரித் துக் கொடுத்தாலும் கூட அந்த அளவுக்கு வாங்க முடியவில்லை. ஆகவே அவர்களுக்கு முழுமையாக நாம் வாய்ப்பு தரவேண்டும். இந்த நிலையிலே அரசாங்கமே ஆரம்பிக்க வேண்டும் என்றால் The maximum capacity of these companies will not be utilised. அதை நாம் பயன்படுத்த முடியாமல் போய்விடும் என்பதற் காகத்தான் இந்த முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.